# 01.01.2017 முதல் ஊதிய மாற்றம்

01.01.2016 முதல் மத்திய அரசு ஊழியர்களுக்கும், 01.01.2017 முதல் பொதுத்துறை ஊழியர்களுக்கும் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றத்தில் மத்திய அரசாங்கத்தின் எதிர்மறை அணுகுமுறைக்கு 31.12.2016 முதல் 01.01.2017 வரை சென்னையில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அனைத்திந்திய மாநாடு தனது வன்மையான கண்டனத்தை தெரிவிக்கின்றது.

7ஆவது ஊதியக் குழு மிகக் குறைவான அளவான சம்பளம் மற்றும் பஞ்சப்படியில் 14.29% அளவே உயர்த்தி பரிந்துரை செய்துள்ளது. FITMENT BENEFIT ஐ அதிகரிப்பது தொடர்பாக பரிசீலிக்க அமைக்கப்பட்ட கமிட்டி நான்கு மாதங்களில் தனது பரிந்துரையை வழங்கும் என்ற உத்தரவாதத்தோடு மத்திய அரசாங்கமும் இந்த பரிந்துரைகளை அமலாக்கி உள்ளது. ஓய்வூதிய மாற்றத்தில் 7ஆவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ள இரண்டாவது OPTION என்பதையும் பரிசீலிப்பதாக உறுதி அளித்துள்ளது. 2016 அக்டோபர் இறுதியோடு 4 மாதங்கள் முடிவடைந்த நிலையில் அரசாங்கம், இந்த உறுதி மொழிகளை காப்பாற்றவில்லை. மறு புறம் மத்திய அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படியில் மாற்றம் செய்யாமல் பழைய ஊதியத்தின் அடிப்படையில், பழைய விகிதங்களிலேயே தற்போதும் தரப்பட்டு வருகிறது. மத்திய அரசாங்கத்தின் இந்த எதிர்மறை நடவடிக்கைகளுக்கு எதிராக மத்திய அரசு ஊழியர் மகாசம்மேளனம் 15.02.2017 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விட்டுள்ளது.

BSNL உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகளுக்கான 3வது ஊதிய மாற்றக்குழு தனது பரிந்துரைகளை வழஙுகி விட்டது; ஆனாலும் அந்த அறிக்கையினை வெளியிட DPEக்கு அனுமதி கிடைக்கவில்லை. 7வது மத்திய ஊதியக் குழு வழங்கியுள்ள மிகக் குறைந்த அளவிலான உயர்வை பார்க்கும் போது 3வது ஊதிய மாற்றக் குழுவும் அதே போல் தான் பரிந்துரைத்திருக்கும். ஊதிய உயர்வு தருவதற்கான அரசின் வழிகாட்டுதல்கள், நஷ்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்கு மிகக் குறைந்த அளவிலான உயர்வு அல்லது உயர்த்திக் கொடுக்காமல் இருப்பதற்கான அரசின் நோக்கத்தை தெளிவாக்குகிறது. மேலும், நமது தொடர்ச்சியான வற்புறுத்தலுக்கு பின்னும், ஊதிய மாற்றத்தோடு ஓய்வூதிய மாற்றமும் தன்னால் நடைபெற வேண்டும் என்கிற கோரிக்கைஇயினை அரசு ஏற்க தயாரில்லை. ஒவ்வொரு முறையும் ஓய்வூதிய மாற்றம் பெற மத்திய அமைச்சரவையின் ஒப்புதல் கட்டாயம் என ஆக்கிவிட்டது.

அரசாங்கத்தின் பொதுத்துறை விரோத கொள்கைகளுக்கு எதிரான அனைத்து சங்கங்களின் ஒன்று பட்ட போராட்டங்களும், புன்னகையுடன் கூடிய சேவை உள்ளிட்ட திட்டங்கள் மூலம் சந்தாதாரர்களுக்கு சிறந்த சேவை தருவதன் மூலமும், 2014-15ல் 672 கோடியாக இருந்த செயல்பாட்டு லாபம் என்பது 2015-16ல் 3378 கோடி ரூபாய்களாக உயர்ந்துள்ளது. 2014-15ல் 8234 கோடி ரூபாய்களாக இருந்த நிகர நஷ்டம் என்பது 2015-16ல் 3880 கோடி ரூபாய்களாக குறைந்துள்ளது. இத்தகைய முன்னேற்றங்கள் இருந்த போதும், BSNL ஊழியர்களுக்கு நியாயமான ஊதிய உயர்வை அரசு மறுக்க அனைத்துவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

ஊழியர்களுக்கான ஊதிய பேச்சு வார்த்தை தொடர்பாக DPE வழிகாட்டுதல் ஏதும் தரவில்லை என்று கூறி பேச்சு வார்த்தைக்கான ஒரு கூட்டுக் குழு அமைக்க வேண்டும் என்கிற நமது கோரிக்கையை BSNL நிர்வாகம் ஏற்க மறுக்கிறது. ஊதிய மாற்றம் தொடர்பான பிரச்சனைகளை ஆய்வு செய்ய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் யாரும் இல்லாமல் சில அதிகாரிகளை மட்டும் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.

மேற்கண்ட அனைத்து விஷயங்களும், ஒரு நியாய்மான ஊதிய மாற்றம் மற்றும் ஓய்வூதிய மாற்றத்திற்காக அனைவரையும் ஒன்று படுத்தி கடுமையான போராட்டங்கள் அவசியம் என்பதை உணர்த்துகிறது. அனைத்து ஊழியர்களும் ஒரு கடுமையான

போராட்டத்திற்கு தயாராக வேண்டும் என்றும், ஒன்றுபட்ட கடுமையான போராட்டத்தை நடத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என மத்திய சங்கத்தை BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அகில இந்திய மாநாடு கேட்டுக் கொள்கிறது.